பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 25 | வியாழக்கிழமை | 29.05.2025 | அதிர்வு 298

## கொழும்பில் ஆணின் சடலம்

### அடையாளம் காணப்படவில்லை



கொழும்பில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் 07



# இந்தியாவை நம்பியிருக்கின்றது வடக்கு

## இதுவரை உதவிகளை வழங்கிய அந்நாட்டு அரசுக்கும் மக்களுக்கும் நன்றி என்கின்றார் ஆளுநர் வேதநாயகன்

“எமக்கு உடனடியாக உதவிகளைச் செய்யும், எமக்கு மிக வேண்டப்பட்ட நாடாக இந்தியா இருக்கின்றது. வடக்கு மாகாணம் உதவிகளுக்காக இந்தியாவை நம்பியிருக்கின்றது. எங்களுக்கு இதுவரை உதவிகளை வழங்கிய இந்திய மக்களுக்கும், இந்திய அரசுக்கும் வடக்கு மக்களின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.”

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். 07

# மாகாண சபைத் தேர்தலை முடிந்தால் விரைவில் நடத்திக் காட்டட்டும் அரசு!




## இப்படி மொட்டுக் கட்சி சவால்

முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்திக் காட்டுமாறு தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சவால் விடுத்துள்ளது.

முன்னாள் ஆளுநர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன இந்தச் சவாலை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“அரசின் செயற்பாடுகளால் அதன் வாக்கு வங்கி சரிந்து வருகின்றது. முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்திக் காட்டுமாறு சவால் விடுக்கின்றோம். 06




திருகோணமலை மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினராகவும், தமிழரசுக் கட்சியின் மாவட்டக் கிளைத் தலைவராகவும் இருக்கின்ற குகதாசன், சத்தம் சந்தடியின்றிப் பண்ணுகின்ற குசும்புத்தனம் தமிழரசுக் கட்சியின் தலைமைக்கு - நிர்வாகத்துக்கு - பெரும் தலைவலியாக மாறியிருப்பதாகத் தெரிகின்றது.

சம்பந்தனால் திருகோணமலைக்கு கொண்டு வந்து நிறுத்தப்பட்ட குகதாசன் இப்படித்தான் சம்பந்தனுக்கும் ‘மூட்டைப்பூச்சி’ மாதிரி நசுக்கிடாமகல் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார். அதே வேலையை இப்போது தமிழரசுக் கட்சியின் தலைமைக்கு அவர் கொடுத்துக் கொண்டிருக்கின்றார் எனக் கட்சித் தலைமை சீறுகின்றது.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுற்ற பின்னர், கட்சியின் தலைமை திருகோணமலை மாவட்டப் பிரதிநிதிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடன் பேசி, தெரிவு செய்யப்பட்ட சபைகளுக்கான தவிசாளர், உதவித் தவிசாளர் வேட்பாளர்களைத் தேர்வு செய்து 06

## உள்ளூராட்சி சபை விவகாரம்:

# எம்.ஏ. சுமந்திரன் - கஜேந்திரகுமார் இடையே நாளை பேச்சுவார்த்தை

## சிவாஜிலிங்கம் தகவல்

(எஸ்.ரகுதீஸ்)

உள்ளூராட்சி சபைகள் அமைப்பது தொடர்பில் இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்க இடையில் நாளை வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது என்று தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உள்ளூர் ஆட்சி தேர்தல் முடிந்து மூன்று வாரங்கள் கடந்துள்ள நிலையிலும், இன்னமும் முழு சபைகளினதும் பெயர் பட்டியல்கள் வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை. அனைத்து உறுப்பினர்களினதும் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டவுடன் ஜூன் மாதம் 2ஆம் திகதியில் இருந்து 4 ஆண்டுகளுக்கான பதவிக் காலம் ஆரம்பிக்கும்.




இந்த நிலையில், உள்ளூராட்சி சபைகள் அமைப்பது தொடர்பில் இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்க இடையில் நாளை வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை பரந்துபட்ட அளவிலான ஒற்றுமைக்கான பேச்சாகவும், வாய் மூலமான மாத்திரம் இல்லாது எழுத்து மூலமான பேச்சாகவும் அமைய வேண்டும்.” என்றார்.

# இரத்த வாந்தி எடுத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

உறவினர் வீட்டுக்கு வந்துவிட்டு மீண்டும் திருகோணமலைக்கு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் இரத்த வாந்தி எடுத்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த விஜயகுமார் ஜெயராசன் (வயது 48) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை யாவார்.

மேற்படி நபர் திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்றுவிட்டு மீண்டும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கி இ.போ.ச. பஸ்ஸில் சென்றுள்ளார்.

இதன்போது அவர் இரத்த வாந்தி எடுத்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுபின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு இரவே உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிபடுத்தினர்.

# துமிந்த திசாநாயக்கவுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்



விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க மீண்டும் மெகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவின் படி சிகிச்சைகளுக்காக சந்தேக நபர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

துமிந்த திசாநாயக்க விசேட வைத்தியர் ஒருவரால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னர் மீண்டும் மெகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

வெள்ளவத்தை அடுக்குமாடி குடியிருப்புத் தொகுதியில் தங்க முலாம் பூசப்பட்ட ரி 56 ரக துப்பாக்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.







## வடக்கு, கிழக்கு துரித அபிவிருத்தி:

# ஜனாதிபதியின் கோரிக்கைக்கு சில அதிகாரிகள் முட்டுக்கட்டை

## ஆளுநர் வேதநாயகன் சுட்டிக்காட்டு



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு உதவுமாறு கோரிக்கை விடுத்தபோதும், கொழும்பிலுள்ள சில திணைக்களங்களின் அதிகாரிகள் அவற்றுக்கு முட்டுக்கட்டை போடும் விதத்தில் செயற்படுகின்றனர் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சுட்டிக்காட்டினார்.

உலக வங்கியின் இலங்கை நாட்டுக்கான செயற்பாட்டு முகாமையாளர் அபிட் கலி செயற்றிட்ட தலைவர் காயத்திரி சிங் உள்ளிட்ட உலக வங்கிக் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது ஆளுநர் உரையாற்றும்போது,

“கடந்த 3 தசாப்தங்களாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் போரால் பாதிக்கப்பட்டிருந்தன. இந்தக் காலப் பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு எந்தவொரு உதவிகளும் கிடைக்கப்பெறவில்லை என்பதுடன் இங்கிருந்த உட்கட்டுமானங்களும் முழுமையாக அழிவடைந்திருந்தன. இந்தநிலையிலேயே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உலக வங்கியை வடக்கு, கிழக்கின் துரித அபிவிருத்தியில் கவனம் செலுத்துமாறு கோரியிருந்தார்.

அதற்கு அமைவாக உலக வங்கிக் குழுவினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பயணம் மேற்கொண்டு பல்வேறு இடங்களையும் பார்வையிட்டிருக்கின்றனர். அதற்கு அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

போரால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை ஒருபோதும் வந்து பார்வையிடாத அதிகாரிகள் சிலர் கொழும்பிலிருந்து கொண்டு உலக வங்கியின் திட்டங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஏன் வழங்கப்படுகின்றன என்று கேள்வி எழுப்புவது பொருத்தமற்றது. அவர்களும் இங்கு வந்து நிலைமைகளைப் பார்வையிட்டால் எமது கோரிக்கைகளின் நியாயத்தன்மையை ஏற்றுக்கொள்வார்கள்.

உலக வங்கி சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துகின்றது.

யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகள் சுற்றுலாத்துறைக்குரிய வளத்தைக் கொண்டிருக்கின்றன. ஆனால், அங்குள்ள இறங்குதுறைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றை அபிவிருத்தி செய்தாலே அதிகளவு சுற்றுலாவிகளை கவர முடியும்.

அதேபோல் வடக்கு – கிழக்குக்கான பயண நேரத்தையும் – தூரத்தையும் சுருக்கும் வகையில் கொக்கிளாய் – புல்மோட்டைப் பாலம் அமைக்கப்பட வேண்டும். ஏ – 9 வீதி எவ்வாறு சுற்றுலாவிகளுக்காக இலகுவாக்கப்பட்டுள்ளதோ அதேபோன்று வடக்குக்கு வரும் சுற்றுலாவிகள் கிழக்குக்கும், கிழக்குக்கு வரும் சுற்றுலாவிகள் வடக்குக்கும் வருவதற்கான வழிகளும் இலகுவாக்கப்பட வேண்டும்.” – என்றார்.

ஆளுநரின் ஆலோசனைக் குழு உறுப்பினர் கலாநிதி அகிலன் கதிர்காமர், உலக வங்கியின் திட்டங்கள் ஊடாக வேலைவாய்ப்புக்கள் எவ்வாறு உருவாக்கப்படப் போகின்றன என்பது தொடர்பிலும் கேள்வி எழுப்பினார்.

உலக வங்கிக் குழுவினருடன் இணைந்து பணியாற்றுவதற்கு ஆளுநருக்கு நன்றிகளைத் தெரிவித்த உலக வங்கியின் இலங்கை நாட்டுக்கான செயற்பாட்டு முகாமையாளர் அபிட் கலி, மாகாணத்தால் வேலைத்திட்டங்களை முன்னுரிமைப்படுத்துமாறும், கால எல்லையை நிர்ணயித்துச் செயற்படுவோம் எனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் இணைப்புச் செயலாளர்களும் கலந்துகொண்டனர்.



# கடற்பரப்பில் காற்றின் வேகம் அதிகரிக்குமென அறிவிப்பு

சிலாபம், புத்தளம் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையும் காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையும் உள்ள கரையோரப் பகுதிகளுக்கு அப்பாலுள்ள கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 60 தொடக்கம் 70 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் குறித்த கடற்பிராந்தியங்கள் அவ்வப்போது கொந்தளிப்பாக காணப்படும் என திணைக்களம் தெரிவித்தது.

மேற்படி கடற்பிராந்தியங்களுக்கு செல்வதை மறு அறிவித்தல் வரை தவிர்க்குமாறு மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்களுக்கு வளிமண்லவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

மன்னார் முதல் புத்தளம், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரங்களுக்கு அப்பாலுள்ள கடற்பிரதேசங்களில் கடல் அலை 2.5 தொடக்கம் 3 மீற்றர் வரை உயரலாம் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

# ஜூன் 7ஆம் திகதி ஹஜ் பெருநாள்!



எதிர்வரும் ஜூன் 7ஆம் திகதி இஸ்லாமிய மக்களின் ஹஜ் பெருநாள் (தியாகத் திருநாள்) கொண்டாடப்படும் என்று கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

புனித துல் ஹிஜ்ஜஹ் மாதத்துக்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது

இதன்போது தலைப்பிறை தென்பட்டதையடுத்து இன்று வியாழக்கிழமை துல் ஹிஜ்ஜஹ் மாதத்தின் முதலாம் பிறை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஜூன் 7ஆம் திகதி ஹஜ் பெருநாள் கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



# தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டமூலத்தின் 2ஆம் வாசிப்பு அடுத்த மாதம் இடம்பெறும்

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு திருத்தச் சட்டமூலத்தை இரண்டாம் வாசிப்பிற்காக அடுத்த மாதம் 3 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பரிணாமம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் வைத்தியர் ஜனக சேனாரத்ன தலைமையில் நேற்று முன்தினம் கூடியது.

# பாதசாரி கடவையில் மின் விளக்குகளை பொருத்தும் வேளைத் திட்டம் ஆரம்பம்



பாதசாரி கடவைகளில் மின் விளக்குகளை பொருத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது.

இதன் முதற்கட்டமாக அடையாளம் காணப்பட்ட ஆபத்தான இடங்களில் அமைந்துள்ள பாதசாரி கடவைகளுக்காக மின் விளக்குகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் நாயகம் கே.சந்திரகுமார தெரிவித்தார்.

இதற்காக சூரிய மின்கலங்களைப் பயன்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார்.

இதனூடாக இரவு நேரங்களில் பாதசாரி கடவைகளில் பயணிப்பவர்களை சாரதிக்கு தெளிவாக அடையாளம் காண முடியும் என்பதுடன் இதனூடாக ஏற்படும் விபத்துகளைக் குறைத்துக் கொள்ள முடியும் என கே.சந்திரகுமார குறிப்பிட்டார்.

இதுவரை குருணாகல், காலி மற்றும் கொழும்பு மாவட்டங்களில் அவ்வாறான 140 பாதசாரி கடவைகளில் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

பாதசாரி கடவைகளில் இடம்பெறும் விபத்துகளால் வருடாந்தம் அதிகளவானோர் உயிரிழக்கின்றனர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது

# பஸ் மிதி பலகையிலிருந்து தவறி விழுந்த இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

பஸ்ஸின் மிதி பலகையில் இருந்து தவறி விழுந்த நிலையில், வைத்திய சாலை சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் புலோப் பளை, பளையைச்சேர்ந்தஅன்ரனிஅருள் தாஸ் நிதுராஜ் (வயது 26) என்ற இளைஞராவார்.

மேற்படி இளைஞர் கடந்த 23 ஆம் திகதி காலை மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த இ.போ.ச பாஸ்ஸின் மிதி பலகையில் நின்று பயணித்துள்ளார். இதன் போது பயணிகள் ஏறும் போது அவர் இறங்கி ஏறியுள்ளார்.

இந்நிலையில், கரந்தாய் பகுதியில் இறங்கிவிட்டு ஏறும்போது பஸ் வண்டியிலிருந்து தவறி விழுந்து படுகாயம் அடைந்தார். இதனை அடுத்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு இருந்த நிலையில்நேற்றுமுந்தினம்செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை பளைப் பொலிஸார் நெறிப்படுத்தினர். (ய)

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானிக்கும் என்று அவருக்கு (குகதாசனுக்கு) கட்சித் தலைவரும் செயலாளரும் ஏற்கனவே தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

கட்சியின் பொதுச் செயலாளர் ஏற்கனவே திருகோணமலைக்குச் சென்று குகதாசன் உட்பட மாவட்ட பிரதிநிதிகளையும், உள்ளூராட்சி சபைகளில் தமிழரசுக்கு ஆதரவு தரக்கூடிய பிற அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளோடும் பேச்சு நடத்தி விட்டு வந்திருந்தார். அச்சமயம் கட்சியின் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் மத்தியில் உரையாடிய செயலாளர் சுமந்திரன், திருகோணமலை மாநகர சபை மேயர், உதவி மேயர், மாவட்டத்தின் பிற உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள் போன்றோர் தெரிவுக்காக கட்சித் தலைமை மீண்டும் திருகோணமலைக்கு வரும் என்று தெரிவித்திருந்தார். அதன்படி வரும் சனிக்கிழமை அங்கு செல்ல கட்சித் தலைமை தீர்மானித்து இருந்தது.

ஆனால் அதற்கு இடையில் தமது மூட்டைப் பூச்சித்தனமான கடி வேலையை குகதாசன் ஆரம்பித்து விட்டார். தமக்குத் தேவையானவரை மாநகர மேயராக அறிவிப்பதற்காக, கட்சியில் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது மாநகர சபை உறுப்பினர்களையும் கூட்டி, தேர்வு நடத்தி ஒருவரை மேயர் பதவிக்கு போட்டியிடுபவர் என்று தம்பாட்டில் அறிவித்திருக்கிறார் குகதாசன்.

இது தவறான நடவடிக்கை, கட்சி ஏற்கனவே வழங்கிய அறிவுறுத்தலுக்கு – முடிவுக்கு – மாறான ஒற்றைப் போக்கு ஏற்பாடு என்பதை கட்சியின் தலைவர் குகதாசனுக்கு நேற்று தொலைபேசியில் அறிவுறுத்தல் விடுக்க ஏற்பாடாகி இருந்ததாகத் தெரிய வந்தது.

25 உறுப்பினர்களைக் கொண்ட திருகோணமலை நகர சபையில் தமிழரசு கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கான பேச்சுக்களை மற்றைய கட்சிகளோடு இனமும் தமிழரசு கட்சி தீர்மானித்து முடிவெடுக்க முன்னர், குகதாசன் வேண்டும் என்றே திட்டமிட்டு அவசர அவசரமாக, காதோடு காது வைத்த மாதிரி, இந்த காய் நகர்த்தலை செய்து, திடீர் அறிவிப்பை விடுத்திருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

அவர் கட்சியின் மாவட்ட தலைவர். தம்மோடு சேர்ந்து இயங்கும் தமது மாவட்டச் செயலாளரை மேயராக்கும் திட்டத்தில் இந்த சதி நகர்வை அவர் முன்னெடுத்து இருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

திருகோணமலை மாநகர சபையின் 25 உறுப்பினர்களில் ஆக ஒன்பது பேர் தான் தமிழரசுக் கட்சியை சேர்ந்தவர்கள். சங்கு கட்சியின் நான்கு உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூன்று உறுப்பினர்களும் என மேலும் ஏழு பேர் தமிழரசு கட்சி முன்னிலைப்படுத்தும் மேயர் வேட்பாளரை ஆதரிக்கக் கூடும் என கருதப்படுகின்றது. ஆகவே அந்த இரு கட்சிகளையும் சேர்ந்த ஏழு உறுப்பினர்களின் கருத்தும் மேயர் தெரிவில் உள்வாங்கப்படுவதுதான் சுமுகமான பெயர் தெரிவுக்கு வழிவகுக்கும் என சுட்டிக்காட்டப்படுகின்றது. அந்தக் கட்சியின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடன் நேரடியாக இல்லாவிட்டாலும், அந்த இரண்டு கட்சிகளின் மாவட்டத் தலைவர்களோடேனும் கலந்தாலோசித்து, அவர்களின் கருத்துகளையும் உள்வாங்கித்தான் மேயர் வேட்பாளரைக் கட்சித் தலைமை தீர்மானிக்கும் என்று கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் கட்சியின் தலைமைதான் சாதக, பாதகங்களை ஆராய்ந்து வேட்பாளர் யார் என்பதை தீர்மானிக்கும் என கட்சி தலைமை தரப்பில் தெரிவிக்கப்படுகிறது

எது, எப்படி ஆயினும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் விடயத்தில் கட்சியின் கட்டுப்பாட்டை மீறி நடக்கும் உறுப்பினர்கள் இலகுவாக பதவி விலக்கப்பட சட்ட ஏற்பாடுகள் வசதியாக உண்டு. இந்த விடயத்தில் – நியமனங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பான விடயத்தில் – கையெழுத்திடும் அதிகாரம் கட்சியின் செயலாளர் என்ற முறையில் சுமந்திரனிடமே உண்டு, குகதாசனிடம் அல்ல என்பதை திருகோணமலை மாவட்ட கிளை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கவனத்தில் கொண்டிருக்கின்றார்கள் எனத் தெரிகிறது.

கட்சியின் ஒழுங்கு முறைக்கு மாறாக குகதாசன் முன்னெடுக்கும் நகர்வுகளுக்கு கட்சியின் அரசியல் குழுவிலும், மத்திய குழுவிலும் கடும் அதிருப்தியும் காய்ச்சலும் உள்ளது என்றும் தெரிகின்றது.

* * *

நேற்று முன்னிரவில் கனடாவில் இருந்து வாட்ஸ் அப்பில் ஓர் அழைப்பு வந்தது. எடுத்தவர் தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளர். எடுத்த எடுப்பில் ஒரு கேள்வி கேட்டார்.

"சைக்கிள் தம்பி கஜேந்திரகுமார் வெள்ளிக்கிழமையன்று சுமந்திரனைச் சந்தித்துப் பேசுகிறார் என சிவாஜிலிங்கதார் கூறுகிறார். அப்படிச் சந்திப்பு நடக்குமா?" – என்று கேட்டார் அந்த நண்பர்.

"நடக்கலாம். அப்படித்தான் கூறுகிறார்கள்" – என்றே நான்.

என் பதில் வர முன்னரே அவர் சீறி விழுந்தார்.

"ஏன் சுமந்திரனுக்கு வெட்கம், ரோஷம், மானம், சூடு, சுரணை ஏதும் கிடையாதா? தும்புக்கட்டை, விளக்குமாறு போன்றவற்றுக்கு கூட சமனானவர் அல்லர் சுமந்திரன் என்று பகிரங்கமாகக் கூறியவர் கஜேந்திரகுமார். அவரை சுமந்திரன் சந்திப்பது தமிழரசு கட்சிக்கு இழுக்கு இல்லையா?" – என்று பாய்ந்தார் அந்த நண்பர்.

"அரசியல் என்றால் சூடு, சுரணை எல்லாவற்றையும் தள்ளி வைத்துவிட்டுத் தானே வரவேண்டும்?" என்று நியாயம் பிளந்தேன் நான். ஆனால் அது அவருக்கு பிடிக்கவில்லை.

"ஏன், 'சுமந்திரனை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளராக நான் ஏற்கவில்லை' என்று சிறிதரன் எம்.பி. கூறியதும் சுமந்திரனுக்கு சீற்றம் பொத்துக் கொண்டு வருகிறது. கிளிநொச்சி நியமனங்களைச் செய்ய மாட்டேன் என்று பகிரங்கமாக அறிவிக்கிறார். கஜேந்திரகுமார் விடயத்தில் மாத்திரம் ஏன் இந்த நழுவல், வழுவல்?" என்று அவர் கேட்ட கேள்விக்கு என்னிடம் பதில் இருக்கவில்லை. ஆயினும் சமாளிப்புக்கு ஏதாவது கூறியாக வேண்டும் என்று கட்டாயத்தில் நான் விளக்கம் ஒன்று கொடுத்தேன்.

"தாங்கள் 24 கரட் தங்கம். மற்றவர்கள் எல்லாம் ஒன்றுக்கும் உதவாத பித்தளைகள், தகரங்கள் என்று ஒதுக்கியவர்களை – துரோகிகள், ஊழல்வாதிகள், ஒட்டுக் குழுக்கள், இந்திய அடிமைகள் என்று தாங்கள் மோசமாக விமர்சித்தவர்களை – எல்லாம் தம்பி கஜேந்திரகுமார் மிக நெருக்கமாக அரவணைக்கும் போது, இன்னொரு கட்சியின் தலைவராக கஜேந்திரகுமாரை சுமந்திரன் சந்திப்பது தவறில்லைத்தானே..!" – என்று நான் சுமந்திரனின் சட்டத்தரணியாக அவருக்கு விளக்கம், வியாக்கியானம் கொடுத்தேன். ஆனால் அது அவருக்குத் திருப்தி தரவில்லை என்றே தோன்றியது.

"அப்படி என்றால் வெள்ளிக்கிழமை அந்தச் சந்திப்பு நடந்தால் – சந்திப்புக்கு சுமந்திரன் வெட்கம், ரோஷம் பார்க்காமல் போனால் – அது பற்றிய செய்திக்கு நல்ல ஒரு தலைப்பிடுங்கள்" – என்றார் அவர்.

நான விடயம் தெரியாமல், 'என்ன தலைப்புப் போடுவது?' என்று நான் அவரைச் சீண்டும் விதத்தில் கேட்டேன். அவரது பதில் சடார் என்று வந்தது.

"கஜேந்திரகுமாரைச் சந்தித்த தும்புத்தடி!' என்று தலைப்பிடுங்கள்" என்று கூறியபடி, தொலைபேசியைத் துண்டித்தார் அந்த தமிழரசுக் கடும் போக்காளர்.

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வடக்கில் நினைவேந்தல் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கொழும்பில்கூட நினைவேந்தல் நடத்தப்பட்டுள்ளது. ஆனால், படையினருக்குரிய கௌரவத்தை இந்த ஆட்சியாளர்கள் வழங்கவில்லை.

நாம் தமிழர்களுக்கு எதிராகப் போர் செய்யவில்லை. நாட்டு மக்களுக்கு வாழ்வதற்குரிய சூழ்நிலை இருக்கவில்லை. எனவே, மக்களைப் பாதுகாப்பதற்காகவே போர் செய்யப்பட்டு, சுதந்திரம் பெறப்பட்டது. இந்நிலைமையை அநுர அரசு சீர்குலைக்கக்கூடாது.

பொய்களைச் சமூகமயப்படுத்தியதால் ஏற்படும் பிரதிபலன்களை இந்த அரசு விரைவில் உணரும்." – என்றார்.




## இந்தியாவை உதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்திய அரசு மற்றும் இந்திய மக்களிடமிருந்து மனிதாபிமான உதவிகள் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:-

"முல்லைத்தீவு மாவட்டச் செயலராக நான் பணியாற்றியிருக்கின்றேன். இங்குள்ள கடற்றொழில் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எனக்கு மிக நன்றாகவே தெரியும். போரால் பாதிக்கப்பட்ட நீங்கள் மீள்குடியமர்வின் பின்னர் சட்டவிரோத மீன்பிடியால் பாதிக்கப்பட்டிருந்தீர்கள். உங்கள் பெறுமதியான வலைகளையும் இழந்திருந்தீர்கள். இன்று இந்திய மக்களும், இந்திய அரசும் உங்களுக்குப் பெறுமதியான வலைகள் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை வழங்குகின்றனர்.

இந்திய மக்களும், இந்திய அரசுகளும் எங்களுக்குக் காலத்துக்குக் காலம் பல்வேறு உதவிகளை வழங்கியிருந்தன. முக்கியமாக இந்திய வீட்டுத் திட்டத்தைக் குறிப்பிட வேண்டும். அவர்களால் எமது ரயில் பாதைகள் புனரமைக்கப்பட்டன.

இன்றைய தினம் முல்லைத்தீவு மருத்துவமனையின் புனரமைப்பை இந்தியா பொறுப்பேற்பதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா அறிவித்திருக்கின்றார். அதற்கு அவருக்கு நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன். எதிர்காலத்திலும் எமது மக்களுக்கான உதவிகளை இந்தியா தொடர வேண்டும்." – என்றார்.

இதன் பின்னர் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் விசேட உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கான குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் வலைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.திலகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.














## கொழும்பில் ஆணின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீட்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கஹதுடுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சியம்பலாகொட பிரதேசத்தில் உள்ள வாவிக்கு அருகில் இருந்தே இந்தச் சடலம் நேற்று புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

சடலமானது அடையாளம் காண்பதற்காகக் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கஹதுடுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிய கொரோனா அச்சுறுத்தல்: மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(எஸ்.ஜினோதன்)

புதிய கோவிட் - 19 திரிபால் ஏற்படும் உலகளாவிய அச்சுறுத் தலைக் கருத்தில்கொண்டு, சுகாதார அமைச்சு சில வைத்திய சாலைகளில் பி.சி.ஆர். பரிசோதனையை அதிகரித்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

பி. சி. ஆர் பரிசோதனை வசதிகளைக் கொண்ட வைத்திய சாலைகள் தற்போது கோவிட் - 19 நோயாளிகளைக் கண்டறிய அதிக அவதானத்துடன் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், காய்ச்சலுக்காக வைத்தியசாலைகளில் சேரும் அல்லது சிகிச்சை பெறும் நோயாளிகள் தொடர்பான கண்காணிப்பை



அதிகரிக்க வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், இலங்கை தொடர்ந்து நிலைமையை உன்னிப்பாகக் கண்காணிக்கும் என்றும், ஆனால், உடனடியாக எந்தக் கட்டுப்பாடுகளையும் விதிக்க முடியாது என்றும் அனில் ஜாசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.










# இந்தியத் துணைத்தூதரக அதிகாரியின் பூதவுடலுக்கு ஆளுநர் நேரில் அஞ்சலி!

வாகன விபத்தில் உயிரிழந்த இந்தியத் துணைத்தூதரக அதிகாரி அமரர் சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரன் சர்மாவின் பூதவுடலுக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேரில் அஞ்சலி செலுத்தினார்.

பிரபாகரன் சர்மாவின் பூதவுடல் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் அஞ்சலிக்காக நேற்று புதன் கிழமை வைக்கப்பட்டிருந்த சமயம் ஆளுநர் அஞ்சலி செலுத்தினார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவும் இதில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## கூட்டுப் பொறுப்பின் தாற்பரியம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு அல்லது அரசுக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு வெளியில் இருந்து சக்திகள் - எதிர்க்கட்சிகள் - முயற்சித்து, ஈடுபாடு காட்ட தேவை இல்லைப் போலும். அரசுத் தரப்புக்குள்ளேயே மூத்த தலைவர்கள், சிரேஷ்ட அமைச்சர்கள் தங்களுக்குள் முரண்பாடான கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிட்டு அரசுக் கட்டமைப்பையே சந்தி சிரிக்க வைத்து விடுவார்கள் போல் தோன்றுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரைவில் கவிழும் என்ற எதிரணியின் பிரசாரம் நகைச்சுவைத்தமானது எனவும், அமைச்சரவை மாற்றம் நடக்கவுள்ளதாக வெளியாகும் தகவல் கூட அரசியல் சூழ்ச்சியின் ஓர் அங்கம்தான் என்றும் அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார். தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்குக் கூட்டுப் பொறுப்புடன் செயற்படும் ஆணையை மக்கள் வழங்கியுள்ளனர். அதற்கமைய நாம் கூட்டு பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றோம். தனிநபர் ஆதிக்கம் கிடையாது. அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறவேண்டும் என்றாலும் கூட அதனையும் கூட்டு பொறுப்புடனேயே செய்வோம்.

“எனினும், அமைச்சரவை மறுசீரமைப்புக்குரிய தேவைப்பாடு தற்போது எழவில்லை. அமைச்சரவையில் உள்ளவர்களுக்கு எதிராக எவ்வித ஊழல் குற்றச்சாட்டும் இல்லை. இவர்களால் முடியாது என மக்களும் கூறவில்லை. அப்படியானால் எதற்காக அமைச்சரவையை மாற்ற வேண்டும்? கடந்த காலங்களில் ஊழல்கள் மற்றும் அரசியல் சூழ்ச்சிகளுக்காக அமைச்சரவை மாற்றப்பட்டது. நாம் அவ்வாறான செயலில் ஈடுபடமாட்டோம்.” - என்று அவர் கூறியிருக்கின்றார்.

ஆனால், அமைச்சரவை மாற்றம் பற்றிய செய்தியை அவிழ்த்து விட்டவரே அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி கூறும் கூட்டுப் பொறுப்பில் அடங்க வேண்டியவரான அரசுத் தரப்பின் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயககந்தான்.

அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணல் போன்று, அரசுக்குச் சொந்தமான ஐ.ரி.என். தொலைக்காட்சிச் சேவையின் நிகழ்ச்சியில் சில தினங்களுக்கு முன்னர் பேசிய சமயமே அமைச்சர் பிமல் ரத்நாயக்க தாம் உட்பட அமைச்சரவை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளில் மாற்றங்கள் குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாகக் கூறியிருந்தார்.

அமைச்சர் ரத்நாயக்கவின் கூற்றுப்படி, அவர் உட்பட பல அமைச்சர்களின் கோரிக்கைகள் காரணமாக இந்த அமைச்சரவை மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவிருக்கின்றது. சில சந்தர்ப்பங்களில், புதியவர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்படலாம் என்றும், மறுசீரமைப்பு செயல்முறை ஏற்கனவே நடந்து கொண்டிருக்கலாம் என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க அப்போது மேலும் தெரிவித்திருந்தார்.

அமைச்சரவை மாற்றம் நடக்கவுள்ளதாக வெளியாகும் தகவல் கூட அரசியல் சூழ்ச்சியின் ஓர் அங்கம்தான் என்று அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி இப்போது கூறுவது உண்மையானால், அந்த அரசியல் சூழ்ச்சியின் முதல் சூத்திரதாரி அவரின் அமைச்சரவை சகாவான அமைச்சர் பிமல் ரத்நாயக்க தான்.

அரசுக்கு எதிராக அரசியல் சூழ்ச்சி செய்யும் பிரதான சூத்திரதாரியை அரசுக்கு உள்ளேயே அரசின் சபை முதல்வராக வைத்துக் கொண்டு அரசுக்கு வெளியே எதிரணியினர் மீது ஆளுந்தரப்பினர் பாய்வதில் அர்த்தமில்லை.

அரசின் மூத்த தலைவர்களிடையே கூட்டுப் பொறுப்புள்ளது என்று அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி பீற்றுவதன் தாற்பரியம் இந்த விடயத்திலேயே அம்பலமாகி விட்டது.

அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி கூறியமை போன்ற கருத்தை விவசாய, காணி அமைச்சர் லால் காந்தவும் கூறியுள்ளார். சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை போல், அமைச்சரவை மாற்றம் அல்லது பிரதமரை மாற்றுவது குறித்து அரசாங்கம் எந்த விவாதமும் நடத்தவில்லை என்று அமைச்சர் லால் காந்தா நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.






### தி.மு.க. வேட்பாளர்கள் அறிவிப்பு:

# மாநிலங்களை எம்.பி ஆகிறார் ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன்

மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஏற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்டது போல் ம.நீ.மவுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. மாநிலங்களவை எம்.பிக்கள் எம்.சண்முகம், முகமது அப்துல்லா, பி.வில்சன், பா.ம.க. எம்.பி. அன்புமணி, அ.தி.மு.க. எம்.பி. சந்திரசேகரன், ம.தி.மு.க. எம்.பி. வைகோ ஆகியோரின் பதவிக் காலம் ஜூலை 24 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

இந்தச் சூழலில் தமிழகத்தில் இருந்து 6 புதிய மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்வு செய்ய ஜூன் 19 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையம் அண்மையில் அறிவித்தது.

இந்நிலையில், மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். கூடவே ஏற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்டது போல் ம.நீ.மவுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“ஜூன்19நடைபெறவிருக்கும்மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சார்பில் போட்டியிடும். நான்கு இடங்களில், மூன்று இடங்களுக்கு தி.மு.க. வேட்பாளர்களுக்கும், மற்றுமுள்ள ஒரு இடத்துக்கு ஏற்கெனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி மக்கள் நீதி மய்யத்திற்கும் ஒரு இடம் ஒதுக்கப்படுகிறது.

தி.மு.க. வேட்பாளர்களாக பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், ரொக்கையா மாலிக் என்ற கவிஞர் சல்மா, ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் கோவை தெற்கில் போட்டியிட்டு தோல்வியை சந்தித்த கமல்ஹாசன், கடந்த மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இணைந்தார். அவர் மக்களவைத் தொகுதியில் போட்டியிடாத நிலையில், கூட்டணி பேச்சுவார்த்தையின் போது, மாநிலங்களவை எம்.பி. பதவி வழங்குவது குறித்து உடன்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து, தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களைஆதரித்துதமிழகம்முழுவதும் தீவிர பிரச்சாரம் செய்தார். மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணி அனைத்து தொகுதிகளையும் கைப்பற்றியது. எனவே, ஏற்கெனவே செய்யப்பட்ட உடன்பாடு அடிப்படையில் தி.மு.கவில் ஒரு எம்.பி. பதவி கமலுக்கு வழங்கப்படுகிறது. இதன்மூலம் கமல்ஹாசன் மாநிலங்களவை எம்.பி ஆகிறார்.

தி.மு.க. சார்பில் மாநிலங்களவை உறுப்பினராக அறிவிக்கப்பட்ட கவிஞர் ரொக்கையா சல்மா என்ற சல்மாவுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

# அண்ணா பல்கலை மாணவியின் துன்புறுத்தல் வழக்கில் சந்தேகநபர் குற்றவாளி என தீர்ப்பு




### ஜூன் 2 இல் தண்டனை அறிவிப்பு

தமிழகத்தின் சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவரை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபருக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் இறுதி விசாரணை நேற்று நடைபெற்றது.

வழக்கை விசாரித்த சென்னை மகளிர் நீதிமன்றம், மேற்படி நபர் குற்றவாளி என தீர்ப்பளித்தது.

அந்த நபருக்கான தண்டனை விபரங்கள் எதிர்வரும் ஜூன் 2ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.





# அமைதி பேச்சை ஜூன் 2 இல் நடத்த ரஷ்யா முன்மொழிவு

ரஷ்யா மற்றும் உக்ரைன் அமைதிப் பேச்சுவார்த்தையை ஜூன் 2 ஆம் திகதி நடத்த ரஷ்யா முன்மொழிந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த பேச்சுவார்த்தைக்கான இடமாக துருக்கியின் இஸ்தான்புல் நகரை ரஷ்யா பரிந்துரைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் பிரதிநிதிகளுக்கு இடையேயான முந்தைய நேரடிப் பேச்சுவார்த்தைகள் இஸ்தான்புல்லில் நடந்தன.

ரஷ்யாவின் இந்த புதிய முன்மொழிவுக்கு உக்ரைன் இதுவரை பகிரங்கமாக எந்தப் பதிலையும் தெரிவிக்கவில்லை.

இந்த முன்மொழிவு குறித்து ரஷ்யாவின் முக்கிய பேச்சுவார்த்தையாளர் விளாடிமிர் மெடின்ஸ்கி கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்த அவர், சாத்தியமான தீர்வு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக்கொள்வதற்காக விரைவில் பேச்சுவார்த்தை நடத்த ரஷ்யா ஒரு திகதியையும் இடத்தையும் முன்வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் ருஸ்டெம்உமெரோவ்உடன்அண்மையில் தொலைபேசியில் பேசியதை உறுதிப்படுத்திய அவர், ரஷ்யாவின் இந்த முன்மொழிவுக்கு உக்ரைனிடமிருந்து விரைவான பதிலுக்காகக் காத்திருப்பதாக வலியுறுத்தியுள்ளார்.

# இஸ்ரேலின் தாக்குதலில் ஹமாஸ் தலைவர் பலி








ஹமாஸின் காசா தலைவர் முகமது சின்வாரை தமது இராணுவம் கொலை செய்துள்ளதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

அவர் ஹமாஸின் மிகவும் தேடப்படும் நபர்களில் ஒருவரும், அந்தக் குழுவின் மறைந்த தலைவர் யஹ்யா சின்வாரின் சகோதரருமாவார் என நெதன்யாகு கூறியுள்ளார்.

மே 13 அன்று காசாவின் தெற்கு நகரமான கான் யூனிஸில் உள்ள ஐரோப்பிய மருத்துவமனையின் முன்னாலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் முன்னெடுக்கப்பட்ட இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதலில் முகமது சின்வார் இலக்குவைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இஸ்ரேலிய இராணுவம், அங்குள்ள ஹமாஸின் நிலத்தடி உள்கட்டமைப்பை அழித்ததாகக் கூறியுள்ளது.

எனினும், சின்வாரின் மரணத்தை ஹமாஸ் உறுதிப்படுத்தவோ மறுக்கவோ இல்லை.

2023 ஒக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட யஹ்யா சின்வார், கடந்த ஒக்டோபரில் இஸ்ரேலிய துருப்புக்களால் கொல்லப்பட்டார்.

600 நாள்களுக்கு முன்பு ஹமாஸின் எல்லை தாண்டிய தாக்குதலுக்கு பதிலளிக்கும் விதமாக இஸ்ரேல் காசாவில் ஒரு இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது,

இதில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். அதன் பின்னர் காசாவில் குறைந்தது 54,084 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என அந்தப் பிரதேசத்தின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

35

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



எஸ்.டி.பண்டாரநாயக்கா

காணி சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை வாபஸ்வாங்குவது குறித்து நேற்றைய பத்தியில் குறிப்பிட்டவை பற்றி இரண்டு பரப்பில் வாசகர்கள் கேள்வியும் விவரமும் கேட்டிருந்தார்கள்.

ஒன்று – எஸ்.டி.பண்டாரநாயக்காவுக்குக் கீழ் இயங்கும் தன்னார்வத் தொண்டர் படையைச் சேர்ந்தவர்கள் என்றால், யார் இந்த எஸ்.டி.பண்டாரநாயக்க? ஸ்ரீலங்கா முன்னேற்ற முன்னணியின் தலைவராக 1989 இல் இருந்தவர். இவரது கட்சியைத்தான் தங்களது நிலைப்பாட்டை வற்புறுத்த ஜே.வி.பி. ஜனாதிபதி பிரேமதாஸா கூட்டிய சர்வ கட்சி கூட்டத்திற்கு நியமித்தது. தொடர்புகளிலும் இணங்கிய சிந்தனைகளின் காலவரையை கவனிக்க வேண்டும்.

இரண்டு – தேசிய மக்கள் சக்தியின் தமிழ்ப் பிரதிநிதிகளும் தங்கள் பங்கிற்கான அழுத்தத்தைத் தந்திருப்பார்கள்தானே. பின் ஏன் அவர்களது அழுத்தம்தான் இதைச் செய்ய வைத்தது என்று கதை அவிழ்த்து விட முயன்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்று எடுத்தெறிந்த போக்கில் பதிந்து இருக்கிறீர்கள் என்பது. பதிவு ல்ஓர் அபிப்பிராயம் தான். அது மாறுபடலாம். ஆனால் அவர்களது பங்கு தேவையில்லை என்ற உதாசீனம் இல்லை. சம உரிமை, சமதர்மம் என்ற நம்பிக்கை உணர்வுகளில் உறவாடும் தமிழ் சக அங்கத்தினர்களுடன் கூட, அவர்கள் பிரதேசத்துக் காணிகள் சுவீகரிக்கப் போவதைப் பற்றியோ அல்லது அப்படியான நடவடிக்கை மக்களிடையே என்ன அபிப்பிராயத்தை எழுப்பும் என்ற கருத்து கூட கேட்கப்பட்டதற்கான



சி.பி.டி.சில்வா

அறிகுறிகள் இல்லை. இதனை நிர்வாக திறனில் போடுவதா அன்றில் 'பஜனைக் கோஷ்டி' என்ற வரைவில் போடுவதா? வர்த்தமானி மீள் வாங்கப்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?


தொடர்ச்சி▲

பட்டது தமிழ்த் தேசியத் தரப்புக்களின் உடனடி எதிர்ப்புகளால்தான். 'காகம் இருக்க பனம்பழம் விழுந்தது போல' பல உரிமை கோரல்கள் இருக்கலாம். ஆனால் ஒன்று யதார்த்தம், அனுபவமும் கூட, 'ஆறு கரை அடங்கி வழி நடந்தால், வாழ்வு வளம் பெறும்."


அதுபோல, தமிழ் மக்களும் ஒன்றிணைந்து நடக்கின் அவர்களின் வாழ்வும் மலரும்.

அரச காணிகளை பகிர்ந்து அளிப்பதில் அதற்காக தமிழர் பாரம்பரிய பிரதேசங்களைக் குறிவைத்து டி.எஸ்.சேனநாயக்கா காலத்திலிருந்து கொத்தலாவலை ஊடாக, பின் ஒவ்வொரு அரசாங்கத்திலும், வெவ்வேறு வடிவங்களிலும் விளக்கங்களிலும் இவை நடத்தப்பட்டன.

காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ், அரசாங்கத்துக்கு உரிய காணிகளைஒ பகிர்ந்து அளிப்பதற்கு வரையறைகளின் அடிப்படையில் ஏற்பாடுகள் இருந்தன. காணி உரித்துத் தருவது ஒரு பிரதேசத்தின் அரசாங்க அதிபரின் அதிகாரத்துக்குப் பாரப்பட்டிருந்தது. அந்த அதிகாரத்தை நிறைவேற்றும் போது அரசாங்க அதிபர் காணிக் கச்சேரி ஒன்றை நடத்த முன், தன்னுடைய பிரதேசத்தில் உள்ள காணி இல்லாத மக்களிடம் இருந்து விண்ணப்பம் கோரி, அவர்களில் காணிகள் இல்லாத அந்தப் பிரதேசத்து மக்களுக்கு முதல் உரிமை கொடுத்து (அதாவது அந்தக் காணிகளின்


கொத்தலாவலை

அருகாமையில் வசித்தவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து), அடுத்து அங்கு வாழும் நடுத்தர வகுப்பு மக்கள், அதற்கடுத்து அந்தப் பிரதேசத்தில் அன்றி மாவட்டத்தில் வாழும் காணி அற்ற மக்கள், அதற்கடுத்து அந்த மாகாணத்தில் வாழும் காணி அற்ற அல்லது நடுத்தர வர்க்கத்தினர் என்று முறைகளைப் பின்பற்ற வேண்டும்.


டி.எஸ்.சேனநாயக்கா

ஆனால் கொத்தலாவலையின் அரசு, அதாவது பகிரப்படும் காணிகளின் அருகாமையில் அன்றில் அதன் சுற்றாடலில் வாழும் மக்கள் என்பது அப்படியான காணிக்கந்தோர்களுக்குப் பொருந்தாது, அத்-தகைய ஒழுங்கு கிராம அபிவிருத்தித் திட்டங்களை மனதில் கொண்டவை என்ற விளக்கத்தை தேர்ந்து, அவற்றை விநியோகித்தார்கள். அப்படியான ஓர் அர்த்தமோ, விளக்கமோ முன்னைய ஆண்டுகளில் கடைப்பிடிக்கப்படவில்லை.

இதுவரை காலமும், 1953 தொடக்கம் காணியற்ற தமிழ் விவசாயிகளோ அன்றில் நடுத்தர வர்க்கத்தினரோ யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளில் இருந்து அந்தப் பிரதேசத்துக்கு வெளியேயோ வேறு மாகாணங்களிலோ எது வித காணிகளும் பெறவில்லை.

அந்த மாவட்டங்களின் நடுத்தர வர்க்கத்தினர் வெளி மாவட்டங்களில் காணியைப் பெற்றிருந்தால் அவை தங்களது சுய சம்பாத்தியங்களில் இருந்துதான் அடையப்பட்டவை. ஆனால் இதற்கு நேர் எதிராக, 1952 இல் இருந்து கல்லோயா, அல்லை, கந்தளாய்ப் பகுதிகளின் அபிவிருத்தி என்ற போர்வையில், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் வெளியே உள்ள மக்களே குடியமர்த்தப்பட்டு, அந்தக் கிராமங்களுக்கு அருகாமையில் இருந்த தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். அதாவது அன்றில் இருந்து தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களே இத்தகைய குடியேற்றங்களுக்கான அரசியலின் திட்டக்களங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

முன்னைய பதிவில் குறித்த, 1957-இல் நாடாளுமன்றில் பேசப்பட்ட கடிதம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஆட்சியில் சி.பி.டி.சில்வா காணி, விவசாயத்துக்குப் பொறுப்பான அமைச்சராகவும், மதவாச்சிப் பிரதேசத்தின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தபோது நடந்தவை. இன்று 'பதவியா' என அறியப்படும் நீர்த்தேக்கம் முன்னர் 'பதவிக்குளம்' என்ற பெயரில் இருந்தது. இன்று அது திருகோணமலை மாவட்டத்தை விட்டு, வடமத்திய

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

மாகாணத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதன் நீர்ப்பாசனம் பெற்றுக் கொள்ளக்கூடிய 14,000 ஏக்கர் காணிகள் திருகோணமலை மாவட்டத்துக்குள் அதன் வலது பக்க ஏரிக்கட்டின் பகுதியில் அமைந் துள்ளது. ஆகவே அதன் காணிப் பகிர்வு முறை யாக திருகோணமலை அரசாங்க அதிபரின் கீழ் தான் வர வேண்டும். அவர்தான் அந்தப் பகுதியில், அதற்கு அருகாமையில் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோர வேண்டும். ஆனால் சி.பி.டி.சில்வாவோ சட்ட திட்டங்கள், முறைமைகள் எவற்றையும் மதிக்காது, தனது நிரந்தர செயலாளர், நீர்ப்பாசனத் திணைக்களத் தலைவர், காணி, காணி அபிவிருத்திப் பகுதி அலுவலர்கள் போன்றவர்கள் தெரிவு செய்த வெளிமாவட்ட சிங்கள மக்களுக்கு காணிகள் தரப்பட்டு குடியேற்றங்கள் நடந்தன.

அந்த நாள்களில் நடந்த கல்லோயா பிரதேச தமிழர்களுக்கு எதிரான கொலைகள் இப்படியாகக் குடியேற்றப்பட்ட பதவியாவின் சிங்கள மக்களால் மேற்கொள்ளப்பட்டவைதான். இவை தொடர்ந்த வையாக 1979 காலப்பகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் ஜனாதிபதி ஜே.ஆருக்கு வவுனியாவின் நெடுங்கேணி பகுதி யிலிருந்து காணிகளை அனுராதபுரம் அரசாங்க அதிபர் அங்கிருந்த சிங்கள மக்களுக்குத் தாரை வார்த்தமை, மூன்று உதவி அரசாங்க அதிபர் பகுதிகள் மதவாச்சியிலிருந்து வவுனியாவுடன் இணைக்கப்படுகின்றமை, பின்னர் புதிய வவுனியா பிரதேசம் உருவாக்கப்படுவது எனப் பல ஆட்சேபக் கடிதங்களும் எழுதி, சந்திப்புக்களும் முன்னெடுத்



விஜயவீரா

தார். பின்னர் கூட்டமைப்புத் தலைவர் சம்பந் தன் திருகோணமலையில் மகாவிளாங்குளம், புல்மோட்டை, ஈச்சலம்பற்று, புன்னைகுடா பற்றி யெல்லாம் பேசினார்கள். இப்படியான முன்னைய அரசாங்கங்களின் போக்குகளையும் தன்மைக



எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா

ளையும் மாற்றி, புதிய யுகத்தில், சமதர்மம் காண வேண்டுமென்று புறப்படுகின்ற தேசிய மக்கள் சக்தி, படையினர் வசமும் அத்துமீறி ஆக்கிர மிக்கப்பட்டுமுள்ள காணிகளைத் தாங்கள் பதவிக்கு வந்தவுடன் உடனடியாக விடுவிப்போம் என உறுதி அளித்தவர்கள், அந்த விடயங்களைக் கிடப்பில் போட்டுவிட்டு, மேலும் காணிகளை அகப்படுத்து வதற்கு இப்படியான வர்த்தமானிகளை வெளியிடு கிறார்கள். பின்னர் அவற்றை முறையாக உரிய வர்களிடம் கொடுப்பதற்காக அளவீடுகள் என்ற வாழைப்பழம் தரப்படுகின்றது.

மற்றவர்களின் அல்லது இன்னும் ஒரு குழுமத் தின் தேசிய உணர்வுகளையும், அபிலாசை களையும் அறிந்து கொள்ளாத, அன்றில் அவற் றுக்காக இருக்கும் கடமைகளை மதிக்காது தான் தோன்றித்தனமாக அதிகாரம் செலுத்த முயலுவது இன்னுமொரு குழுமத்தின் தேசியம் ஆகாது. அந்த வியாதி ஏகாதிபத்தியம் என வர்ணிக்கப்படும். நான் முன்னர் குறிப்பிட்டபடி ஜே.வி.பி. தலைவர் விஜய வீராவின் கொள்கைகளில் அவர் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை தனித்துவம் கொண்டவர்களாக, அந் தப் பிரதேசத்தில் பாரம்பரியமாக வசித்தவர்களாகப் பார்க்கவில்லை. சிற்சில நேரங்களில், தங்களை நியாயப்படுத்திக் கொள்வதற்காக தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு, அவை தீர்க்கப்பட வேண்டும் என்ற பிரசாரம் மேற்கொண்டாலும், அவை ஒப்புக் காகவும், உதட்டளவிலேயேதானாகும். நாட்டின் சிறுபான்மை என்பதைத் தவிர, தேசிய இனமாகக் கருதி, அவர்களது உரிமைகளை மதிக்க விரும்ப வில்லை. தங்களது சிங்கள, பௌத்த பேராண்மை திணிப்பு நடத்தப்பட வேண்டும் என்ற ஏகாதிபத்திய நடைமுறைகளே அவர்களால் கையாளப்பட்டன.

தற்போது காணி அளவீடு உரிமைகள் பற்றிய வர்த்தமானி மீளப்பெற்றமையில் தேசிய

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

மக்கள் சக்தி (ஜே.வி.பி.) கூட இருந்தாலும், ஏனைய தேசிய இனங்களின் உரிமைகள் தொடர்பில் ஏதோ ஒரு வகையில் தங்களுக்கு கடமைகள் உண்டு என்று உணர்ந்ததை அது சுட்டிக்காட்டுகிறது. ஆகவே, தங்களோடு முரண்பாடுகளைப் பேசி ஒன்றாக முன்னேறலாம் என்ற கரும்பையும் அல்லது கரட்டையும் இந்த நடவடிக்கை மூலம் அது வைக்கிறது.

வெளிநாட்டுக் குடியேற்றவாதிகளால் போரினாலும், தந்திரங்களினாலும், பின் நிர்வாக அமைப்புகளினாலும் ஒன்றாக இணைத்து ஆட்சி செய்யப்பட்ட மக்கள் கூட்டங்கள் அடங்கிய நாட்டை, அவரவர்களது தனித்துவத்துக்கு ஏற்ப மீளமைப்பது சமஷ்டி அமைப்பினால்தான் முடியும் என்ற கருத்தை முதலில் முன்வைத்து, அதற்கு ஆதரவு தேடியவர் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா. தமிழும், சிங்களமும் அரசின் தேசிய மொழிகளாக இருக்க வேண்டும் என்ற கருத்தை கொண்டவர். ஆனால் அரசியல் அதிகாரத் தேவைகளில் சிங்களம் மட்டும் சட்டத்தை உருவாக்கி, பௌத்த பேரினவாதத்திற்கு ஆலவட்டம் பிடித்து, அவர்களாலேயே கொல்லப்பட்டார். ஆனால் தமிழ் மக்களது அபிலாசைகளும், அவர்கள் எதிர்



பொன்னம்பலம் இராமநாதன்

பார்க்கக் கூடியவைகளும் சற்று பின்தள்ளி சென்று பார்த்தால், 1920 இலயே அனுமானிக்கக் கூடியவையாக இருந்தன. ஆனாலும் இலங்கை என்ற தேசிய உணர்வுக்காக் தமிழ் மக்களிடையே இருந்த பிரிவினைகளும் பண்டாரநாயக்காவின் சமஷ்டி அமைப்புக்கு 1926 ஆதரவு தராமல் படிப்படியாக இன்றைய நிலைக்கு வழிவகுத்தன.

15 டிசம்பர் 2017 இல் இலங்கையில் கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளின் பின், ஓர் அரசியல் கூட்டத்தை ஒழுங்கு படுத்தியவர் பொன்னம்பலம் அருணாசலம். அவர் தன்னுடைய சகோதரர் இராம



பொன்னம்பலம் அருணாசலம்

நாதனோடும் மற்றைய சிங்களத் தலைவர்களோடும் இலங்கைக்கான சுயாட்சி (Local Self Government for Ceylon) முன்னிலையில் இருந்து, இங்கிலாந்து தரப்புகளோடு பேச்சு வார்த்தைகளில் இருந்தவர். 1917 ஆம் ஆண்டு நடந்த கூட்டம் முக்கியமாக எவ்விதமான அரசமைப்புச் சட்ட மாற்றங்கள் தேவை என்பதை கலந்துரையாடவே நடந்தது.

அன்று தமது தலைமை உரையில் “அதிகமான மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய நல்ல தருணம் இப்போது ஏற்பட்டுள்ளது. எங்களுடைய வாழ்க்கைகளை நாமே நிர்வகிக்கவும், அதில் நாங்கள் எங்கள் தவறுகளை மேற்கொள்ளவும், அனுபவங்களால் அறிவு பெறவும், அவற்றால் தன்னம்பிக்கையையும் சுயமரியாதையையும் வளர்க்கவும் விரும்புகிறோம். இவை எங்களது தேசிய வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் இன்றியமையாதவை. எப்படி மற்ற மக்கள் தங்களது சுயமரியாதையுடன், தங்களைத் தாங்களே நிர்வாகம் செய்து, பலத்துடன் தங்களது நாடுகளிலேயே மதிக்கப்பட்டு, அதேபோல் வெளிநாடுகளிலும் மதிப்புகள் பெறுகின்றமைப் போல, நாங்களும் அப்படியான முன்னேற்றங்கள் பெறுவதற்கான மாற்றங்களை அடைந்து கொள்ள வேண்டும்.” – என்றார்.

அவருடைய அன்றைய வார்த்தைகள் இன்று இந்த நிலையில் இருக்கும் தமிழ் மக்களுக்கு விழிப்புணர்வு தருபவை.

இரண்டு வருடங்களின் பின் 11 டிசம்பர் 1919 இல் இலங்கை தேசிய காங்கிரஸின் (Ceylon National Congress) தலைவராக அவர் ஆற்றிய உரையில் “இன்று ஒரேயடியாக எங்களுக்கிடையே இருந்த சின்னத்தனமான போக்குகளையும் வித்தியாசங்களையும், நாங்கள் எந்த இனம், சாதி, மதம் என்ற பேதங்கள் எல்லாவற்றையும் கடந்து, எழுந்து விட்டோம்” – என அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

ஆனால் அந்த நம்பிக்கை நிலை கொள்ளவில்லை. சிங்கள – தமிழ் அங்கத்தினர்களிடையே

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

எந்த வகையில் பிரதிநிதித்துவம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற மனத்தாங்கல்களில் அவர் இலங்கை தேசிய காங்கிரஸின் தலைமைப் பதவியை 1920 இல் துறந்தார்.

அதைத்தொடர்ந்து 1923இல் இலங்கை தமிழர் கூட்டுறவை (Ceylon Tamil League) அவர்களுடைய அபிப்பிராயங்களுக்காக தொடங்கினார். ஆயினும் பல காலம் அதனோடு அவரால் பயணிக்க முடியவில்லை. 9 ஜனவரி 1924இல் இயற்கை எய்தினார்.

அன்றிலிருந்து பண்டாரநாயக்காவின் சமஷ்டி அமைப்பு, பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தங்கள் என நீண்டு, பின் இந்தியா ஒப்பந்தம், சந்திரிகாவின் வரைவு யோசனை, நோர்வே அனுசரணையுடனான தீர்வு அடிப்படைகள் என இந்த இரு இனங்களும் ஒரு சிறிய நாட்டில் சகோதரத்துடன் வாழ முடியாத சூழ்நிலைகளும், அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பாத வன்மங்களும் உருவாகி, இடையில் வட்டுக் கோட்டைத் தீர்மானத்திற்கு வழி வகுத்து, போரையும் சந்தித்து, முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் நடந்தேறின.

தங்களது சுய நிர்ணய உரிமைகளை தமிழ் மக்கள் கோரியமையாலும், அதன் அடிப்படையில் தனி நாடு மூலம் தங்களது இறைமையை நிலைநாட்ட எத்தனித்தமையாலும், சிங்களப் பெரும்பான்மை அவர்களை சிறுபான்மையினராகவே கணித்து, தங்களது நல்லெண்ணத்தில் தங்களால் தரக்கூடிய ஏதாவது விசேட சலுகைகளையும் சிறப்புரிமைகளையும் பெரும்பான்மையின் விருப்பில் பெறலாமே ஒழிய, உரித்தாக அடைய முடியாது என்ற விடாப்பிடியிலேயே இருக்கிறது.

நாட்டின் புத்திஜீவிகளையும், சர்வதேசத்தையும் இந்த எண்பது வருடங்களாக உருக்கும் (Soul Searching) கேள்வி, ஏன் இந்த சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்கள் ஒரு ஜனநாயகத்தின் வாக்குறுதிகளை காப்பாற்ற முடிவதில்லை என்பதே.

அந்த வாக்குறுதிகள் ஜனநாயகத்தில் எவை என்றும்தெரியப்படுத்தப்பட்டுள்ளன. அவைசுயகௌரவம் (Dignity), சமத்துவம் (Equality), சுதந்திரம் (Freedom), நீதி (Justice), சமாதானம் (Peace), சுபீட்சம் (Prosperity) என்பனவாகும்.

இந்த உருக்கமான தேடலுக்கு யார் பதில் தரப் போகிறார்கள்?

(தொடரும்)



# முல்லையில் உணவு ஒவ்வாமை காரணமாக 21 மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்ப்பு

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு பகுதியில் அமைந்துள்ள பாரதி வித்தியாலயத்தில் நேற்றைய தினம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு ஒவ்வாமை காரணமாக ஒரே வகுப்பைச் சேர்ந்த 21 மாணவர்கள் தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக 10 மாணவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு சுகாதார பரிசோதகர்கள் உணவின் மாதிரியை பெற்றுச் சென்றுள்ளனர். இருப்பினும் ஏனைய வகுப்பினை சேர்ந்த எந்த ஒரு மாணவர்களுக்கும் உணவு ஒவ்வாமை ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




# முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு இந்தியாவின் மனிதாபிமான உதவிகள்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு இந்திய அரசாங்கத்தினதும் இந்திய மக்களினதும் மனிதாபிமான உதவிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றையதினம் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக கலந்து சிறப்பித்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்ட மீனவர்கள் முப்பது பேருக்கும், அதே நேரம் முல்லைத்தீவு மாவட்ட சமாசங்களின் சங்கத்தினருக்கும் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் ஆகியவற்றை வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மீனவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.














# முல்லையில் இந்திய உதவியில் உருவான சந்திரன் கிராமத்தின் வீடுகள் கையளிப்பு!

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 'சந்திரன் கிராமம்' வீடு கையளிப்பு நிகழ்வு நேற்று மாலை4 மணியளவில் கேப்பாப்பிலவு பிலக் குடியிருப்பில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையிலும் மற்றும் இலங்கைக்கான இந்நிய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் பிரதான பங்களிப்புடன் நடைபெற்றது.

இந்த சந்திரன் கிராமத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 24 வீடுகள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவினால் கையளிக்கப்பட்டன.

இந்த கையளிப்பு நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதன், நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எம்.நஷிமுதீன், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் அரவிந்த ஸ்ரீநாத், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், கிராம அலுவலகர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், பொது மக்கள் முதலானோர் கலந்துகொண்டனர்.














# மக்களுக்கு விருப்பம் இல்லாத திட்டங்களை நடைமுறைப்படுத்த இடமளிக்கமாட்டோம்!

## மன்னார் ஒருங்கிணைப்புத் தலைவர் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவிப்பு





(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் காற்று, கனிய மணல் போன்ற வளங்கள் காணப்படு கின்றன. ஆனாலும் பொருளாதார வளர்ச்சிக்காக மக்கள் விரும்பாத செயற்பாடுகளை செய்ய மாட்டோம் என கூட்டுறவு பிரதி அமைச்சரும் மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் அமைக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருக்கான உத்தியோகபூர்வ அலுவலக திறப்பு விழா நிகழ்வின் போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த கால அரசாங்கங்கள் ஊடாக இந்த கனிய மணல் அகழ்வில் ஈடுபட இருக்கின்ற நிறுவனங்கள் முறையற்ற முறையில், சரியான அனுமதி பெறாமல், அரசியல் ரீதியான சலுகைகளை வைத் துக்கொண்டு, இந்த செயற்பாட்டுக்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ளன.

அவர்கள் இந்த அனுமதியை சும்மா பெறவில்லை. முன்பு இங்கு இருந்த அரசியல்வாதிகள்,அரச அதிகாரிகள், சமூக மட்ட அமைப்புக்களின் அனும தியை உத்தியோக பூர்வமாக பெற்று அதை நடைமுறைப்படுத்த வருகை தந்திருக்கிறார்கள்.

ஆனால் எங்களுடைய அரசாங் கத்தை பொறுத்த வரையில் மக்களின் பாதுகாப்பு, சூழல், மக்களின் விருப்பம் என்பவற்றுக்கு முதன்மை அழிப்போம் .

எங்கள் நாட்டிலே எங்களுக்கு வரு மானத்தை ஈட்டி தரக்கூடிய பல வளங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக மன் னார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் காற்று என்பது மிக சிறந்த வளம். அதே போன்று இந்த கனிய மணல் மிக சிறந்த வளம்.

விஞ்ஞான ரீதியில் இவ்வகையான செயற்பாட்டினால் இப்பகுதிக்கு அல்லது சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகிறதா என் பதை ஆய்வு செய்து, அதன் பிறகு அதற் கான நடவடிக்கைகள் எடுக்க கூடியதாக இருக்கும்.

பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக நாங்கள் இந்த மாவட் டத்தின் அரசாங்க அதிபர், அரச ஊழி யர்கள், இந்தப் பிரதேசத்தை சேர்ந்த மக்கள், இந்த சூழல் போன்ற விஷயங் களைக் கருத்தில் கொள்வோம்.

அதில் பாதிப்பு இருக்குமானால், மக்களிடம் எதிர்ப்பு இருக்கும் என்றால், அவ்வகையான நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபட மாட்டோம். – எனவும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழு கூட்டத்தின் போது கனிய மணல் அகழ்வுக்கான நவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படாது எனத் தெரிவிக்கப்பட்ட போதும், அங்கு தொடர்ச்சியாக கனிய மணல் அகழ்வுக் கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டு. வெல்லவெளி வீதியில் ஆண் ஒருவரின் சடலம் மோட்டார் சைக்கிளுடன் நேற்றுக் காலையில் மீட்பு





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள திக்கோடை சந்தி அருகாமையில் உள்ள வீதியின் மதகு ஒன்றிற்கு அருகில் 38 வயதுடைய ஆண் ஒருவரின் சடலம் அவரது மோட்டார் சைக்கிளுடன் நேற்றுப் புதன் கிழமை காலையில் மீட்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளி பொலிசார் தெரிவித்தனர்.

அம்பலாந்துறையைச் சேர்ந்த உண வகம் ஒன்றின் உரிமையாளரான 38 வயதுடைய தியாகராசா சுகிதரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்த நிலை யில் மீட்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை இரவு அன்னமலை பிர தேசத்தில் இருந்து மோட்டார் சைக்கி ளில் பிரயாணித்திருக்கின்றார். நேற்றுக் காலை திக்கோடை சந்திக்கு அருகா மையிலுள்ள வீதியிலுள்ள மதகு ஒன் றிற்கு அருகில் மோட்டார் சைக்கிளு டன் கீழே வீழ்ந்த நிலையில் சடலம் ஒன்று கிடப்பதை கண்டு வீதியால் பிரயாணித்தவர்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து சடலத்தை தாங் கள் மீட்டு பிரேத பரிசோதனைக்காக களுவாஞ்சிக்குடி வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை வெல்லாவெளி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.05.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயற்றிறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையான மன நிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்பே-ாது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்க முயலுங்கள்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதற்றமான நிலைமை உங்களுக்குக் கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்வுக்குச் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

கால் வலி மற்றும் பல் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்துக்குப் பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர் பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும்.




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயற்றிறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.05.2025




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதற்றம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.




உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்குச் சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயற்திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

# மட்டுவிலைச் சேர்ந்த திருச்செல்வம் மேலும் இரண்டு உலக சாதனைகள்



(த.சுபேசன்)

சாவகச்சேரி, மட்டுவில் பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதான செ.திருச்செல்வம் அண்மையில் மேலும் இரு உலகசாதனைகளை நிகழ்த்தி கலாமின் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

2,540 கிலோகிராம் எடை கொண்ட இரண்டு வாகனங்களை ஒரே நேரத்தில் தனது காதுகளில் கட்டி 2நிமிடங்கள் 5செக்கன்களில் 100மீற்றர் தூரம் இழுத்து ஒரு சாதனையையும் –

அதேநேரம் 1,550 கிலோகிராம் எடை கொண்ட வாகனத்தை 5நிமிடங்கள் 30செக்கன்களில் 225மீற்றர் தூரம் இழுத்து மேலும் ஓர் உலக சாதனையையும் நிலைநாட்டியுள்ளார்.

மேற்படி உலக சாதனைகளை 2025 ஏப்ரல் 30 ஆம் திகதியன்று நிகழ்நிலையில் நிகழ்த்திய சூழலில் அதனை கலாமின் உலக சாதனை நிறுவனம் அங்கீகரித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அவருக்கான உலக சாதனைச் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தது.

சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

உலக சாதனையாளரான செ.திருச்செல்வம் தனது 60 ஆவது வயதின் பின்னர் தலைமுடி, தாடி, காது மற்றும் உடல் ஆகியவற்றின் உதவியோடு கனரக வாகனங்களை இழுத்து 5 தடவைகள் சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் வெவ்வேறான உலக சாதனைகளைப் பதிவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பல உலக சாதனைகளை நிகழ்த்தவிருக்கின்றார் எனவும், இளைஞர்களுக்கு தான் ஓர் முன்மாதிரியாக இருக்க விரும்புகின்றார் எனவும் 7 உலக சாதனைகளுக்கு சொந்தக்காரரான செ.திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.